

பாசிர் ரிஸ்
மரபுடைமைப் பாதை
வரைபடம் மற்றும் பரிந்துரைக்கப்படும் வழித்தடங்கள்

பாசிர் ரிஸ் மரபுடைமைப் பாதை, சிங்கப்பூரின் வரலாற்றையும் நினைவில் நிற்கும் இடங்களையும் ஆவணப்படுத்தி படைக்க தேசிய மரபுடைமைக் கழகம் மேற்கொள்ளும் தொடர் முயற்சியின் ஒரு பகுதியாகும். இந்தப் பாதை, இவ்வட்டாரத்தில் பணிபுரிந்த, வாழ்ந்த அல்லது பொழுதுபோக்கிய மக்களின் ஞாபகங்களை நினைவுபடுத்தும் என்றும், வருகையாளர்களுக்கும் புதிய குடியிருப்பாளர்களுக்கும் தகவலளிப்பதற்குப் பயன்படும் என்றும் நம்புகிறோம்.

ஆதரவளிப்போர்

National Heritage Board

MCCY Ministry of Culture, Community and Youth



பாசிர் ரிஸ் கடற்கரை, 1958
தகவல் கலைகள் அமைச்சின் திரட்டு, சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்திற்கு வழங்கியது

# பரிந்துரைக்கப்படும் குறுந்தொலைவு வழித்தடங்கள்

பாசிர் ரிஸ்ஸின் கரையோரச் சுற்றுப்புறம் பல நூற்றாண்டுகளாக மக்களின் வாழ்க்கையிலும், வேலையிலும், பொழுதுபோக்குகளிலும் முக்கிய அங்கம் வகித்து வருகிறது. தேசிய மரபுடைமைக் கழகம் சிறப்பாகத் தயாரித்திருக்கும் மூன்று கருப்பொருள் பாதைகளின் வழியாக, பாசிர் ரிஸ்ஸில் கரையோர வாழ்க்கையின் உருமாற்றத்தை நீங்கள் கண்டறியலாம். அதோடு, இந்தக் கடலோர நகரில் மறைந்திருக்கும் வடிவமைப்புகளையும் கட்டடக்கலை பொக்கிஷங்களையும் காணலாம்.


## கரையோர மரபுடைமை
(நடந்து சென்றால் ஒரு மணிநேரம்; மிதிவண்டியில் அரை மணிநேரம்)

1980களில் உருவாக்கப்பட்ட பாசிர் ரிஸ் நகரம், அவ்வட்டாரத்தின் உல்லாசத்தள உணர்வு, மீன்பிடிக்கும் கரையோரப் பாரம்பரியம் ஆகியன உள்ளிட்ட கடந்தகால அம்சங்களைத் தக்க வைத்துள்ளது. பாசிர் ரிஸ் பூங்காவில் அமைந்திருக்கும் சதுப்புநிலக் காடு, கடந்தகால வாழ்க்கையுடனான தொடர்பை நிலைநாட்டுகிறது. அக்காலத்தில், சதுப்புநில மரக்கட்டைகள் கிராமவாசிகளுக்கு முக்கிய வளமாகப் பயன்பட்டன. இந்தப் பாதை, பாசிர் ரிஸ் கடற்கரையின் நெடுகில் அமைந்துள்ள முக்கியமான மரபுடைமைத் தளங்களுக்கு உங்களைக் அழைத்துச் செல்லும்.




உங்கள் பயணத்தை பாசிர் ரிஸ் பூங்காவின் நுழைவாயிலில் தொடங்குங்கள் (வாகன நிறுத்துமிடம் B-க்கு அருகில்). இந்தப் பூங்கா, முன்னாள் பூங்கா மற்றும் பொழுதுபோக்கு துறையால் (இன்றைய தேசிய பூங்காக் கழகம்) 1980களில் கட்டப்பட்டது. பூங்காவின் 70 ஹெக்டர் பரப்பளவில் பாதிக்குமேல் சதுப்புநிலங்களிலும், சேற்றுநிலங்களிலும், நீர்வழிகளிலும் இருந்து மீட்கப்பட்டது. பூங்காவின் நீளமான கடலோரப் பகுதி பாசிர் ரிஸ் கடற்கரையிலிருந்து சுங்காய் லோயாங் வரை செல்கிறது.

மறுசீரமைப்புக்கு முன்பிருந்த பாசிர் ரிஸ் கிராமத்தை நினைவூட்டும் ஆறு ஹெக்டர் சதுப்புநிலக் காட்டுக்குள் செல்லுங்கள். பலகை பதித்த பாதையில் நடந்து சென்று, அக்காலத்தில் கரையோரமாக மண்டிக்கிடந்த செம்பு பூக்கும் டெரன்டம் மோரா, அத்தாப் சீசீ பழமும் கருப்பட்டியும் தரும் நிபா பனை போன்ற சதுப்புநிலத் தாவரங்களைப் பற்றி தெரிந்துகொள்ளுங்கள். பறவைகளைப் பார்வையிடும் கோபுரம் உங்கள் பாதையில் எதிர்வரும். அங்கிருந்து வனவாழ்வினங்களைப் பார்வையிடலாம். உங்களிடம் தொலைநோக்கி இருந்தால், நீங்கள் சாம்பல் நாரைகள், நீர்நாய்கள் அல்லது அவ்வப்போது உவர்நீர் முதலையையும் கூடப் பார்க்கலாம்!




இப்பாதை வழியாகத் தொடர்ந்து நடந்து சென்று கடலை நோக்கிப் பாருங்கள். அங்கு பற்பல கேலோங் அல்லது மரத்தாலான மீன்பிடிக்கும் மேடைகளும் மீன் பண்ணைகளும் தென்படும். சிங்கப்பூரில் 1800களின் முற்பகுதியில் *கேலோங்* அறிமுகமாவதற்குமுன், மீன் பிடிப்பதற்கு ஈட்டிகளே பெரும்பாலும் பயன்படுத்தப்பட்டன. கம்போங் காலகட்டத்தில், பாசிர் ரிஸ் போன்ற வட்டாரங்களிலிருந்த சதுப்புநிலங்களில் கிடைத்த *பக்காவ்* மரக்கட்டைகளைப் பயன்படுத்தி *கேலோங்* கட்டப்பட்டது.

அடுத்து, முன்னாள் மக்கள் கழக விடுமுறை வீடுகளைத் தாண்டிச் செல்லுங்கள். 1973ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்ட இந்த வீடுகள், சிங்கப்பூரர்களுக்குக் கட்டுப்படியாகும் விலையில் வாடகை விடுமுறை வீடுகளை வழங்கின. 1980களில், மக்கள் கழகம் நடத்திய ஆகப் பிரபலமான விடுமுறை வசதிகளில் இந்த வீடுகளும் உள்ளடங்கின. மக்கள் கழகம் பொங்கோலிலும் செயின்ட் ஜான்ஸ் தீவிலும் வீடுகளையும் முகாம்களையும் நடத்தியது. பக்கத்திலுள்ள விடுமுறை வீடுகளின் மத்தியில் பிரபலமான யானை விளையாட்டுத்திடலையும் நீங்கள் பார்வையிடலாம். விடுமுறை வீடுகளுக்குப் பிறகு பேஷன் வேவ் @ பாசிர் ரிஸ் எனும் சிறப்பு சமூக மன்றத்தைக் காணலாம். இந்த மன்றம், தோனிப் படகோட்டம், கயாக் படகோட்டம் போன்ற நீர் விளையாட்டுகளை வழங்குகிறது.



காட்டிலிருந்து வெளியேறிய பிறகு, பாசிர் ரிஸ் கடற்கரையை நோக்கிச் செல்லுங்கள். இங்குதான் யூதத் தொழிலதிபர் ஜோசப் இலாயஸின் முன்னாள் விடுமுறை பங்களா அமைந்திருந்தது. வசதிபடைத்த குடும்பங்கள் 20ஆம் நூற்றாண்டின் துவக்கத்திலிருந்து பாசிர் ரிஸ் வட்டாரத்தில் கட்டிய பல வீடுகளில் இலாயஸ் பங்களாவும் ஒன்று. இந்த பங்களா 1952ஆம் ஆண்டு பாசிர் ரிஸ் ஹோட்டலாகச் சீரமைக்கப்பட்டு, 1983 வரை செயல்பட்டது. இந்தக் காலகட்டத்தில், பொதுமக்களின் பயன்பாட்டுக்காகக் கடற்கரையில் இருக்கைகள், கூரையுள்ள மாடங்கள், பார்பகியூ திண்டுகள் போன்ற வசதிகளும் அமைக்கப்பட்டன. இன்று, இங்கு நீச்சலடிப்பதும், கயாக் படகு செலுத்துதலும், கடற்கரையில் ஓய்வாகப் பொழுதைக் கழிப்பதும் பிரபலமான நடவடிக்கைகளாகத் திகழ்கின்றன.





இறுதியாக, துணிகர விளையாட்டுத்திடலுக்குச் செல்லுங்கள். சிங்கப்பூரின் ஆகப்பெரிய விளையாட்டுத்திடல்களில் ஒன்றான இங்கு நீங்கள் இளைப்பாறலாம், அல்லது பூதாகர வலையில் சிறுவர்கள் ஏறுவதையும் ஊஞ்சல்களில் ஆடுவதையும் பார்த்து மகிழலாம். இந்தப் பாதை இங்கு முடிவடைந்தாலும், நீங்கள் பாசிர் ரிஸ் விளையாட்டுப் பாதையில் சென்று நகராய்வைத் தொடரலாம்.

பாசிர் ரிஸ் கடற்கரையின் வெண்மணலில் கால்பதித்த பிறகு, பூங்காவில் நடந்து சென்று சுங்காய் அபி அபி நீரோடையின் பாலத்தைக் கடந்து செல்லுங்கள். பூங்காவிலுள்ள இரு ஆறுகளில் ஒன்று இந்த நீரோடை. இப்பகுதியில் ஏராளமாகக் காணப்பட்ட அவிசென்னியா சதுப்புநிலத் தாவரங்களின் உள்ளூர் பெயரிலிருந்து அபி அபி என்ற பெயர் உருவானது.

## பாசிர் ரிஸ் விளையாட்டுப்பாதை
(நடந்து சென்றால் ஒரு மணிநேரம்)

பாசிர் ரிஸ் வட்டாரம் 19ஆம் நூற்றாண்டில் இருந்தே விளையாட்டுக்கும் பொழுதுபோக்குக்கும் உகந்த இடமாகப் பெயர் பெற்றிருந்தது. பிந்திய தலைமுறையினர் இங்கு தொடர்ந்து பல்வேறு வகையான பொழுதுபோக்குகளில் ஈடுபட்டு வருகின்றனர். இந்தப் பாதை, பாசிர் ரிஸ்ஸில் உள்ள பொழுதுபோக்குத் தளங்களுக்கு உங்களை அழைத்துச்செல்லும். சிங்கப்பூரின் ஆகப்பெரிய விளையாட்டுத்திடல்களில் ஒன்றும், நாட்டிலுள்ள ஒரே வணிக உவர்நீர் மீன்பிடி குளமும் அவற்றுள் அடங்கும்.



1986ஆம் ஆண்டு திறக்கப்பட்ட துணிகர விளையாட்டுத்திடலில் பயணத்தைத் தொடங்குங்கள். இது சிங்கப்பூரின் ஆகப்பெரிய விளையாட்டுத்திடல்களில் ஒன்றாகும். ஒருவரின் கற்பனையைத் தூண்டும் வகையில் வடிவமைக்கப்பட்ட சாதனங்களும் வசதிகளும் இங்கு உள்ளன. ஏழு மீட்டர் உயரமான கயிற்றுப்பின்னல் கூம்பு, கம்பிவடப் பாதைகள், கருப்பொருள் வடிவிலான விளையாட்டு மையங்கள், அக்காலத்தில் இங்கிருந்த மணல் சுரங்கங்களை நினைவுபடுத்தும் பெரிய மணல்மேடுகள் ஆகியன இதில் உள்ளடங்கும்.

நவீன விளையாட்டு வளாகத்திலிருந்து பேருந்தில் ஏறி இலாயஸ் மால் கடைத்தொகுதியை நோக்கிச் செல்லுங்கள். கடைத்தொகுதிக்குப் பக்கத்தில், வீடமைப்பு வளர்ச்சிக் கழகம் (வீவக) 1980களில் கட்டிய பிரபலமான படகு விளையாட்டுத்திடல் அமைந்துள்ளது. டெர்ராசோ பதிப்புக்கற்கள், வடிவியல் கோடுகள் மற்றும் ஆசிய கலாசாரங்கள், விலங்குகள், வணிகங்கள், உணவு வகைகள் ஆகியவற்றின் அடிப்படையிலான வடிவங்கள் ஆகியவற்றுக்குப் பெயர்பெற்ற வீவக விளையாட்டுத்திடல்களில் இதுவும் ஒன்று. இந்த விளையாட்டுத்திடலின் மத்தியில் துவாகோ எனப்படும் ஒரு வகையான படகு வடிவம் உள்ளது. சிவப்பு, பச்சை, வெள்ளை நிறக் கோடுகளும், சாயமடிக்கப்பட்ட கண் வடிவமும் கொண்ட இந்தப் படகு, சரக்கு போக்குவரத்துக்குப் பயன்படுத்தப்பட்டது.



இலாயஸ் மால் கடைத்தொகுதியிலிருந்து பாசிர் ரிஸ் டிரைவ் 3 வழியாக பாசிர் ரிஸ் நகரப் பூங்காவை நோக்கி கிழக்குத் திசையில் நடந்து செல்லுங்கள். இங்கு, சிங்கப்பூரின் ஒரே உவர்நீர் மீன்பிடி குளத்தில் நீங்கள் மீன்பிடிக்கலாம். இந்தக் குளம் 1989ல் அமைக்கப்பட்டது. 1967 முதல் 1970களின் முற்பகுதி வரை செயல்பட்ட முன்னாள் கோல்டன் பேலஸ் விடுமுறை உல்லாசத்தளத்தின் முக்கிய ஈர்ப்புகளில் ஒன்றாக இந்தப் பெரிய குளம் முன்பு திகழ்ந்தது. இன்று, கடல்வாழ் மீன்களும், இறால்களும், நண்டுகளும் பிடிப்பதற்கான இடமாக இது திகழ்கிறது.



நகரப் பூங்காவில் நீச்சல் குளம், விளையாட்டுத்திடல், பூந்தோட்டம் ஆகியன கொண்ட விளையாட்டு நிலையமும் உள்ளது. அருகில் பாசிர் ரிஸ் உணவங்காடி நிலையம் அமைந்துள்ளது. 2018ல் திறக்கப்பட்ட இதுதான் இந்நகரிலுள்ள ஒரே உணவங்காடி நிலையம். இங்கு பானம் பருகி இளைப்பாறி, இந்நிலையத்தின் பிரபலமான உணவு வகைகளைச் சுவைத்துப் பாருங்கள். இதற்குப் பிறகும் நீங்கள் தொடர்ந்து ஆராய விரும்பினால், அடுத்த பாதையில் செல்லுங்கள்!



**விருப்பத்திற்குட்பட்டது:** நீங்களும் மேலும் பொழுதுபோக்க விரும்பினால், 1988ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட டௌன்டவுன் ஈஸ்ட் உல்லாசத்தளத்திற்குச் செல்லுங்கள். "தொழிலாளர்களுக்கான மனமகிழ் மன்றமாக" இது உருவாக்கப்பட்டது. பிரிட்டனில் 1970களில் அமைக்கப்பட்ட பிரபலமான பட்லின்ஸ் விடுமுறை முகாம்களைப் போல இந்த உல்லாசத்தளம் ஆரம்பத்தில் வடிவமைக்கப்பட்டது. அதன்பிறகு விடுமுறை வீடுகள், பற்பல பொழுதுபோக்கு வசதிகள், முன்னாள் எஸ்கேப் தீம் பார்க், இந்நாளின் வைல்ட் வைல்ட் வெட் நீர்ப் பூங்கா போன்றவை சேர்க்கப்பட்டன.



## கட்டடக்கலை சிறப்பம்சங்கள்
(நடந்து சென்றால் ஒன்றரை மணிநேரம்)


பாசிர் ரிஸ் தனித்துவமிக்கக் கட்டடக்கலை பாணிகளும் அம்சங்களும் நிறைந்த காட்சியகமாகத் திகழ்கிறது. அந்தப் பாணிகளில் பலவும் இந்நகரின் கடலோர மரபுடைமையைச் சார்ந்தவையாக உள்ளன. இந்தப் பாதையில், பாசிர் ரிஸ் நகரின் கட்டடங்களை ஆராயலாம். கடல்துறையைக் கருப்பொருளாகக் கொண்ட பொது வீடமைப்புக் கட்டடங்கள் முதல் பலதரப்பட்ட கலாசார, சமய அமைப்புகள் வரை நீங்கள் காணலாம்.



பாசிர் ரிஸ் நகரப் பூங்காவில் இருந்து, சுங்காய் தெம்பனிஸின் குறுக்கே உள்ள பாலத்தை நோக்கிச் சென்று, பாசிர் ரிஸ் டிரைவ் 1 நோக்கிச்செல்லும் ஓரப்பாதையில் நடந்து செல்லுங்கள். இங்குள்ள நீர்முகப்பு வீடுகளும் சுங்காய் அபி அபியில் உள்ள வீடுகளும், பொதுக் குடியிருப்பின் வடிவமைப்பில் பன்மயத்தைப் புகுத்த வீவக முனைப்புடன் செயல்பட்டு வந்த 1980களில் கட்டப்பட்டன. இங்கு, உயரமான கட்டடங்களுக்கு இடையில் தனித்துவமான கூர்முனை கூரை வடிவம் கொண்ட உயரமில்லாத கட்டடங்களுடன், ஆற்றோரமாகக் கண்கவர் காட்சி உருவாக்கப்பட்டுள்ளது. இயற்கைச் சூழலோடு, தென்னை மரங்களும், ஆற்றோர இருக்கைகளும், காட்சி மேடைகளும் ஆற்றின் ஓரப்பாதையை அலங்கரிக்கின்றன.

நீங்கள் பாசிர் ரிஸ் டிரைவ் 1-ஐ அடைந்தவுடன் போக்குவரத்து விளக்குள்ள சாலைக் கடப்பைக் கடந்து, பாசிர் ரிஸ் ஸ்திரீட் 11 நோக்கி கிழக்கே செல்லுங்கள். இந்தத் தெருவில் நடந்து சென்று, இங்குள்ள தனித்துவமிக்கக் குடியிருப்புகளின் வடிவமைப்பைப் பார்வையிடுங்கள். கப்பலின் சாளரங்கள் (கட்டடங்கள் 130-137), கலங்கரை விளக்கின் வடிவிலான புறத்தோட்டம் (கட்டடங்கள் 138-146) போன்ற கடல்துறை வடிவங்களை நீங்கள் காண்பீர்கள்.





பாசிர் ரிஸ் ஸ்திரீட் 11, 12 சந்திப்பில், ஸ்திரீட் 12 வழியாக வடகிழக்குத் திசையில் பாசிர் ரிஸ் டிரைவ் 4 நோக்கிச் செல்லுங்கள். இந்தத் தெருவின் முனையில், தென்கிழக்காசியாவின் முதல் திபெத்திய பௌத்த ஆலயமான சக்ய டென்பெல் லிங் ஆலயத்தைக் காண்பீர்கள். திபெத்திய பௌத்த சமயத்தின் சக்ய பிரிவைச் சேர்ந்த இந்த ஆலயம், வட்டார சக்ய நிலையமாகவும் செயல்படுகிறது. சீனா, இந்தோனீசியா, வியட்னாம் மற்றும் இதர நாடுகளிலிருந்து இந்த ஆலயத்திற்குத் துறவிகள் அடிக்கடி வந்து செல்கின்றனர். ஆலயத்தின் துறவிகள் சாயமடித்த ஐந்து நிறங்களும் அலங்கரிப்புகளும் திபெத்திய பௌத்த நிறக் கோட்பாட்டின் அடிப்படையிலானவை. ஒவ்வொரு நிறமும் குறிப்பிட்டதொரு புத்தரைப் பிரதிநிதிக்கிறது.



சக்ய டென்பெல் லிங் ஆலயத்திலிருந்து, வீவக கட்டடங்களின் வழியாகக் கிழக்குத் திசையில் பாசிர் ரிஸ் டிரைவ் 3-க்குச் செல்லுங்கள். அங்கு மஸ்ஜித் அல்-இஸ்டிக்ஃபர் பள்ளிவாசலைக் காண்பீர்கள். 1999ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட இந்தப் பள்ளிவாசல், "நீலப் பள்ளிவாசல்" என்றழைக்கப்படும் இஸ்தான்புல்லின் 17ஆம் நூற்றாண்டு காலத்தைச் சேர்ந்த சுல்தான் அகமது பள்ளிவாசலின் வடிவமைப்பைப் பின்பற்றுகிறது. மனம்திருந்தி இறைவனிடம் மன்னிப்பு கோருவதைக் குறிப்பிடும் இஸ்டிக்ஃபர் என்ற அரபுச் சொல்லைக்கொண்டு பள்ளிவாசலுக்குப் பெயர் வைக்கப்பட்டது. பள்ளிவாசலில் வெங்காய வடிவிலான இரண்டு நீல நிற குவிமாடங்கள் உள்ளன. பெரிய குவிமாடத்தில் பிறையுடன் நட்சத்திரமும், சிறிய குவிமாடத்தில் தூபியும் உள்ளன.



அடுத்து, பாசிர் ரிஸ் டிரைவ் 3 வழியாகத் தென் திசையில் நடந்து சென்று, லோயாங் வேயில் திரும்புங்கள். பல சமயங்கள் ஒருங்கே அமைந்திருக்கும் லோயாங் துவா பெக் கொங் ஆலயம் இங்குதான் உள்ளது. ஆலயத்தின் பிரதான மண்டபத்தில் துவா பெக் கொங்கும், டாய் சுய் உள்ளிட்ட மற்ற தாவிச தெய்வங்களும் வீற்றிருக்கின்றனர். நேர்த்தியான உட்புறக் கட்டடக்கலையில் செதுக்கப்பட்ட கற்பாளங்களும், ஆலயத்தின் உட்கூரையில் பதிக்கப்பட்ட தாமரை வடிவிலான எண்சட்டமும், சீன ராசிபலனின் 12 விலங்குகளுடன் வடிவமைக்கப்பட்டு தரையில் பதிக்கப்பட்ட மற்றோர் எண்சட்டமும் உள்ளடங்கும். இந்த ஆலயத்தில் விநாயகர் சந்நிதியும் மற்ற இந்து தெய்வச் சந்நிதிகளும், உள்ளூர் காவல் தெய்வமான டத்தோ கொங்கின் *கிராமட்டும்* உள்ளன.



**விருப்பத்திற்குட்பட்டது:** நீங்கள் மேற்கொண்டு ஆராய விரும்பினால், பாசிர் ரிஸ் டிரைவ் 1-க்கும் 3-க்கும் இடையிலான சுங்காய் அபி அபி ஆற்றின் நெடுகிலுள்ள பசுமைப் பாதைக்குச் செல்லுங்கள். இங்கு அமைந்துள்ள விருது பெற்ற குடியிருப்புப் பேட்டைகள், கட்டடங்களும் இயற்கைச் சூழலும் எவ்வாறு ஒருங்கிணைக்கப்படமுடியும் என்பதற்கான எடுத்துக்காட்டுகளாகத் திகழ்கின்றன. இங்கு, சுங்காய் அபி அபியின் சதுப்புநிலப்பகுதிகளால் ஆதரிக்கப்படும் பலதரப்பட்ட பூக்களையும், தாவரங்களையும், விலங்கினங்களையும் நீங்கள் பார்த்து ரசிக்கலாம். இவ்வட்டாரத்தில் முன்பிருந்த சதுப்புநிலப் பகுதிகளுக்கு மறுவடிவம் கொடுக்க, தேசிய பூங்காக் கழகம் இப்பகுதியைப் பாதுகாத்து வைத்துள்ளது. சுற்றுப்புறச் சீரமைப்பும் இங்கு பயன்படுத்தப்பட்ட பொறியியல் தீர்வுகளும் பொங்கோல் நீர்வழி, துடிப்பான அழகிய, தூய்மையான (ஏபிசி) நீர்நிலைகள் திட்டம் போன்ற பிற்காலத் திட்டப்பணிகளுக்கு வழிவகுத்தன.




## HERITAGE SITES IN THE SUGGESTED SHORT TRAIL ROUTES




All information contained in this trail map is provided in good faith, and every reasonable effort has been made to ensure that the information is accurate and up to date at time of print. Accordingly, NHB makes no warranty or representation relating to the trail map and all information contained therein, and users relying on any of the information contained in the trail map shall do so at their own risk and diligence.

© 2019 National Heritage Board. All rights reserved.